புகழமிர்தம் காரியாலயம்,

காங்கேயநல்லூர்.

JARAN'S ENGRAVERS MADRAS

சந்தா ரூ. 2-0-0.

பொருளடக்கம்.

திருப்புகழ்
உருவேற வேஜெபித்து 147
ஸ்வரம் - உருவேற 153
கந்தரலங்காரம்
சாகைக்கு மீண்டு 154
கந்தர் திருவிளையாடல்
சிகரமூர்த்தி 158
கற்பு 162
அபிசாரக் கழிச்சலுக்கு 169
கில்லாக்களும் முருகர் தலங்களும் 170

(கந்தரநுபூதி பின்னர் வரும்)

திருப்புகழமிர்தம் மலர்கள்

ஈசுவர, பிரமாதி, விக்கிரம, விஷு சித்திரபாநு ஆண்டு மலர்கள் மட்டும் கிடைக்கும். விலை மலர் பிரதி ஒன்றுக்கு ரூ. 2-0-0 சித்திரபாநு ஆண்டு மலர் மட்டும் 2-4-0. மற்ற ஆண்டு மலர்கள் கைவசம் கிடையாது. தபாற்செலவு (ரிஜிஸ்ட்ரேஷன் செலவு உள்பட பிரதி ஒன்றுக்கு ரூ. 0-7-0.

உமாபதி சிவாசாரியர் திரட்டி யருளிய தேவார அருள் முறைத் திரட்டு திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் எழுதிய பதவுரை விளக்கவுரையுடன் கூடியது.

விலை ரூ. 1-0-0. தபாற்செலவு ரிஜிஸ்ட்ரேஷன் உள்பட பிரதி 1-க்கு 0-7-0.

திருப்புகழமிர்தம் ஆபீஸ்,
காங்கேயநல்லூர், (Via) காட்பாடி. N. A.

அன்பர் பிரிவு.

எனது அன்பரும், திருச்சி மரக்கடை பெருந்தகைமையுடைய ஆ. பொன்னுசாமி பிள்ளையவர்களுடைய இளவலும், புதுக்கோட்டை சமஸ்தான தமிழ் வித்துவானும் ஆகிய திருச்சிராப்பள்ளி ஆ. தங்கசாமிபிள்ளையவர்கள் சுபாநு, ஆவணி மூலத்தன்று குகனடி சேர்ந்ததற்குப் பெரிதும் வருந்துகின்றேன். அவர்கள் குடும்பத்திற்கு ஆறுதல் கூறுகிறேன்.

அன்பன்,
கிருபானந்தவாரி

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றுள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 8. Vol 8. | ஸுபாநு ஹு ஐப்பசி மீ 1௨ அக்டோபர் 1943 | இதழ் 7. No 7.

திருப்புகழ்

விராலிமலை.

உருவேற வேஜெபித்து வோருகோடி யோமசித்தி
 யுட்னாக ஆகமத்து கந்துபேணி
உணர்வாசை யாரிடத்து மருவாது வோரேழத்தை
 யோழியாது வூதைவிட்டி ருந்துநாளும்
தரியாத போதகத்தர் குருவாவ ரோரோருத்தர்
 தருவார்கள் ஞானவித்தை தஞ்சமாமோ
தழலாடி வீதிவட்ட மோளிபோத ஞானசித்தி
 தருமாகி லாகுமத்தை கண்டிலேனே
குருநாடி ராசரிக்கர் துரியோத னாதிவர்க்க
 குடிமாள மாயமிட்டு குந்திபாலர்
குலையாமல் நீதிகட்டி யேழுபாரை யாளவிட்ட
 குறளாக னூறில்நேட்டை கோண்டஆதி
மருகா புராரிசித்தன் மகனே விராலிசித்ர
 மலைமே லுலாவுசித்த அங்கைவேலா
மதுரா புரேசர்மெய்க்க அரசாளு மாறன்வேப்பு
 வளைகூனை யேநிமிர்த்த தம்பிரானே.

பதவுரை.

குருநாடு இராசரிக்கர் - குருநாட்டை யாண்டுவந்த அரசர்களாகிய, துரியோதன ஆதிவர்க்க குடிமாள - துரியோதனன் முதலிய கொடிய குலமும் குடியும் மாண்டொழிய, மாயம் இட்டு - மாயைகளைச் செய்தும், குந்திபாலர் - குந்தி தேவியின் புதல்வர்களாகிய பாண்டவர்கள், குலையாமல் - குலையாமற் படிக்கு, நீதி கட்டி எழு பாரை ஆளவிட்ட - சிறந்த நீதிநெறி வழுவாது ஏழுலகங்களையும் அரசாளுமாறு அருள்புரிந்தவரும், குறள் ஆகன் - குறிய வடிவத்தை யுடையவரும், ஊறில் நெட்டை கொண்ட ஆதி - கெடுதலில்லாத நீண்ட வடிவத்தைக் கொண்ட முதல்வரும் ஆகிய விட்டுணுமூர்த்தியின், மருகா - திருமருகரே! புரஅரி சித்தன் மகனே - முப்புரங்களை எரித்த எல்லாம் வல்ல சித்தராகிய சிவபெருமானுடைய திருக்குமாரரே! விராலி சித்ர மலைமேல் உலாவு சித்த - அழகிய விராலிமலைமீது உலாவுகின்ற சித்தரே! அம்கை வேலா - அழகிய திருக்கரத்தில் வேலாயுதத்தைத் தரித்தவரே! மதுராபுர ஈசர் மெய்க்க - மதுரையில் வாழும், சிவபெருமானுடைய திருவருளை மெய்ப்பிக்குமாறு, அரசு ஆளும் மாறன் - அரசுபுரிகின்ற கூன்பாண்டியனுடைய, வெப்பு வளை கூனையே நிமிர்த்த - வெப்புநோயை நீக்கியதுடன் வளைந்த கூனையும் நிமிர்த்தி யாட்கொண்ட, தம்பிரானே - தனக்குமேல் தலைவன் இல்லாதவரே! உருவு ஏறவே ஜெபித்து - மந்திர உரு ஏறுமாறு இடையறாது ஜெபஞ் செய்தும், ஒருகோடி ஓம சித்தி உடனுக - ஓமத்தீயில் ஒருகோடி ஆகுதி செய்து அதனால் சித்தி பெற்றும், ஆகமத்து உகந்து பேணி - சிவாகமங்களை உவந்து விரும்பியும், உணர்வு ஆசை யாரிடத்து மருவாது - அறிவும் ஆசையும் யாரிடத்தும் வைக்காமலும், ஓர் எழுத்தை ஒழியாது ஊதைவிட்டு இருந்து - பிரணவ மந்திரத்தை யுச்சரித்து இடையறாது பிராண வாயுவை யோகமுறைப்படி விடுத்து உள்ளம் ஒருமைப்பட்டு இருந்தும், நாளும் தரியாத போதகத்தர் - நாள்தோறும் மேற்கூறியவைகளை மேற்கொள்ளாது பேரளவில் குரு என்று வெளிப்பட்டு சிவஞான நிலையைப் பற்றிப் போதிக்க வந்து, குருஆவர் - குருவாக உலாவுவார்கள்; ஓர்ஒருத்தர் ஞானவித்தைதருவார்கள் - அங்ஙனம் வருகின்ற அவர்கள் ஞானவித்தையும் உபதேசிப்பார்கள்; தஞ்சம் ஆமோ - அவ்வாறு அநுபவமின்றி அவர்கள் உபதேசிப்பது பற்றுக்கோடாக ஆகுமோ? தழல் ஆடிவீதி - புருவ

நடுவே ஜோதியானது ஆடிபோல் விளங்கி வீதிபோல் வழி காட்ட, வட்டம் ஒளி ஞான போத சித்தி - வட்டவடிவாகி ஞான ஒளிவீச சிவபோத சித்தியை, தரும் ஆகில் ஆகும் - தருவதானால் அது பெறத்தக்கதாகும், அத்தை கண்டிலேன் - அதனை அடியேன் காணுமல் தவிக்கின்றேன்.

பொழிப்புரை.

குருநாட்டை யாட்சி செய்த துரியோதனதியர் குலம் மாள அநேக மாயைகளைச் செய்து குந்தியின் மைந்தர்களாகிய பாண்டவர்கள் துன்புறுமல் நீதி நெறியோடு ஏழுலகங்களை யாளச் செய்தவரும், குறளுருவத்தை எடுத்தவரும், நெடிய உருவத்தைக் கொண்ட முதல்வரு மாகிய நாராயண மூர்த்தியின் திருமருகரே! திரிபுர தகனராகிய சிவபெருமானுடைய திருக்குமாரரே! அழகிய விராலி மலையின்மீது உலாவுகின்ற சித்தரே! அழகிய கரத்தில் வேற்படையை ஏந்தியவரே! மதுரையில் எழுந்தருளியுள்ள சொக்கலிங்கப் பெருமானுடைய திருவருளை மெய்ப்பிக்கும் பொருட்டு, அங்கு அரசாண்ட பாண்டியனது வெப்பு நோயையும் வளைந்த கூனையும் நீக்கிய தலைவரே! உருவு நிரம்ப இடையறுது ஜெபஞ் செய்தும், ஓமத் தீயில் ஒருகோடி ஆகுதிகளைச் செய்து சித்தி பெற்றும், சிவாகமங்களை உவந்து விரும்பியும், சிவத்தைத் தவிர வேறு ஒருவரையும் அறிந்து விரும்பாமலும் அடுக்காமலும், ஓம் என்னும் தனிமந்திரத்தை ஒழியாது சிந்தித்து சிவயோக முறைப்படி பிராணவாயுவை விடுத்தும், நாடோறும் இந்த் நலங்களை மேற்கொள்ளாத சிலர் குருவென்று புறப்பட்டு உபதேசிக்கும் உபதேசம் பற்றுக்கோடாக ஆகுமோ? ஒரு போதும் ஆகாது. புருவ நடுவில் கண்ணுடியைப்போல் ஜோதி தோன்றி வட்டமான அஜ்ஜோதியில் வழி தோன்றி அதனுள் ஒளி செய்யும் ஞானப் பிரகாசமானது சித்தித்து அடியேனுக்கு சிறந்த நலத்தைத் தருமாயின் அது சிறப்புடைத்தாகும்; அத்தகைய நலத்தை அடியேன் காணுமல் அவமே யலைகின்றேன். (அருள் புரிவீர்)

விரிவுரை.

இப்பாடலில், முதல் நான்கு வரியில் குருவாவதற் குரியவர் யாவர்? அவர் தன்மை இவை என்பவற்றை விளக்குகின்றனர்.

உருவேறவே ஜெபித்து:—

இறைவனுடைய மூல மந்திரத்தை ஒருமையுடன் தனியிடத் தமர்ந்து விதிப்படி உருவேற ஜெபித்தல் வேண் டும். அவ்வாறு ஜெபிப்பவர்களுடைய சஞ்சிதவினைகளா கிய பஞ்சுப் பொதிகள் ஜெபத்தீயால் எரிந்தொழியும்.

ஒருகோடி ஓமசித்தி:—

சிவவெள்ளிக் குண்டத்தில் விளங்கும் சிவாக்கினியில் ஒருகோடி ஆகுதி செய்து வழிபடல். அதனால் கலியின் வெம்மை தணியும்.

பூமென் கோதை உமையொரு பாகனை
ஓமஞ் செய்தும் உணர்மின்கள் உள்ளத்தால்
காமற் காய்ந்த பிரான்கடம் பந்துறை
நாமம் ஏத்தநம் தீவினை நாசமே.

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே. — அப்பர்.

ஆகமத்துகந்துபேணி:—

சிவாகமமே பதிநூல் ஆதலால் அதனை உவந்து விரும்பி ஓதுவர்.

ஆசை யாரிடத்து மருவாது:—

இறைவனையே ஏத்தும் திருவுடையார் ஏனையோரை யாது குறித்தும் விரும்பார்.

திருவுமெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்களென் றெண்ணி
ஒருவரை மதியா துறுமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்

முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினு லுன்னைப்
பரவிடு மடியேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ் சுடரே. — சுந்தரர்.

ஓரெழுத்தை ஒழியாது ஊதைவிட்டிருந்து:—

பிரணவ மந்திரத்தை உச்சரித்து சிவயோக முறைப் படி பிராண வாயுவை சஞ்சரிக்கச் செய்து ஓவியம்போல் அசைவற் றிருப்பர்.

ஓரெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லந்தம் அருள்வாயே. - திருப்புகழ்.

துரியாத போதகத்தர் குருவாவரோ?:—

மேற்கூறிய குருவின் இலக்கணங்கள் இல்லாத வெறும் ஆட்கள் குருவென்ற பேருடன் வெளிவந்து உபதேசிப்பதனுல் அவர்கள் உண்மைக் குருவாகார்.

தருவார்கள் ஞானவித்தை தஞ்சமாமோ?:—

அவர்கள் உபதேசிக்கும் பொருளும் உண்மையாகா. குருடனுக்கு மற்ருெரு குருடன் வழிகாட்டி இருவரும் குழியில் வீழ்ந்ததோ டொக்கும்.

குருடருக்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்
குருடரும் வீழ்வர்கள், முன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே. — திருமந்திரம்.

தழலாடி.........ஞானசித்தி:—

புருவ மத்தியில் நாட்டத்தை வைத்து தியானஞ் செய் யில் ஆங்கு ஞானஒளி வீசி அதில் வீதி போன்றதொரு வழியும் உண்டாகி சிவஞானஒளி யுண்டாகும்.

சோதிமலை யொன்று தோன்றிற் றதிலொரு
வீதி யுண்டாச்சுதடி அம்மா. — திருவருட்பா.

கற்பகந் தெருவில் வீதி கொண்டு. — திருப்புகழ்.

குருநாடி ராசரிக்கர்.........ஆதி:—

சந்திர வம்சத்தில் சவ்வருணன் என்ற அரசனுக்கு தபதி யென்பாளிடம் குருவருளால் பிறந்த புதல்வனுக்கு குரு என்று பேர். குருவென்ற அம் மன்னன் நனி சிறந்து புகழுடன் பூமியைப் புரந்தனன். அதனால் அந் நாட்டிற்குக் குருநாடு என்ற பேருண்டாயிற்று. அவன் மரபும் குருகுலம் எனப்படும். அம் மரபில் வந்தவர்கள் பாண்டவர்கள்.

நன்னெறியி னின்றும் வழுவாத பாண்டவர்கட்குக் கண்ணபிரான் துணை நின்று, கொடுங் குணங்கள் யாவும் பொருந்திய துரியோதனுதியரை மாள்வித்தனர். அதன் பொருட்டு பகலை இரவாக்கியது, விதுரர் வில்லை வெட்டச் செய்தது, பீஷ்ம துரோணர்களை தந்திரத்தால் கொல்வித்தது ஆகிய பலமாயங்களைச் செய்தனர். துரியோதனனிடம் தூதாகச் சிறிய வடிவினர்போல் சென்று, அவன் ஆழ்ந்த குழி வெட்டி அதன்மேல் தடுக்கிட்டு ஆசனம் போட்டு வைக்க, அதன்மீது இருந்து அடி பாதலமும் முடி ககன கூடமும் செல்ல விசுவரூப மெடுத்தனர். ஆகிய வரலாறு களை சுவாமிகள் இனிது எடுத்து சுருங்கச் சொல்கின்றனர்.

சித்தன் மகனே:—

சிவபெருமான் மதுரையில் எல்லாம்வல்ல சித்தராகி வந்து அருள் விளையாடலைச் செய்து கல்லானைக்குக் கரும்பு கொடுத்தமையால் சித்தன் எனக் குறித்தனர்.

விராலிசித்ர மலைமே லுலாவுசித்த:—

சித்தன்மகன் சித்தன்; சித்தர்களால் வணங்கத் தக்கவன்; பழநிக்கும் சித்தன்வாழ்வு என்ற பேருண்டு.

சித்தா பரத்தமரர் கத்தா. — திருப்புகழ்.

வளைகூனையே நிமிர்த்த:—

சுப்ரமண்ய சாரூபம் பெற்ற அபரசுப்ரமண்யரில் ஒருவர் சுப்ரமண்யத்தின் திருவருள் தாங்கி திருஞான சம்பந்தராக அவதரித்து சைவசமயத்தையும் சோமசுந்தரர் திரு

வருகையும் வெளிப்படுத்தி நிறுவி, பாண்டியன் உள்ளக் கூனையும் உடற்கூனையும் நிமிர்த்தி யருளினார்.

கருத்துரை.

திருமால் மருக! சிவமைந்த! விராலிமலைமேவு விமல! பாண்டியனை யாண்ட பரம! அசற்குருவை விலக்கி சற்குரு நாதனைப் பெற்று சிவஞானமுற்று உய்ய அருள்புரிவீர்.

திருப்புகழ் ஸ்வரம்.

இராகம்: மத்யமாவதி **தாளம்: ஜம்பை.**

; ரிரி பமரீ ஸா	ஸ நிபா நி ஸ ரீ ரீ
உ ரு வே . . ற	வே . . ஜெ . பி த்து
; ரிம பா ; பா	பமபநி பமரீமரி ஸ
ஒ ரு கோ . டி	ஓ . . . ம . சி . . த்தி
; நி ஸ ரி மா , மா	ம ரிபம மரி ரீ ஸா
உ ட ஞு . . க	ஆ . . . க . ம த்து
; ரி ம ப நீ , நிம	பா ; பா ; பா
க ந்து பே	. . . . ணி
; ம ப நீ ; ப ம	பா நீ நீ ஸா ஸா
உ ணர் வா . . சை	யா . ரி டத் தும்
; நி ஸ ரீ ; ரீ	ஸ ரிமா ரீ ரீ ஸா
ம ரு வா . து	வோ . . ரெழுத் தை
; நி ஸ ரீ ; ஸா	ஸ நிஸநி ப மரிம ரி ஸ
ஒ ழி யா . து	உ . . . தை . . . விட் டி
; ரி ம ப நீ , நிம	பா ; பா ; பா
ரு ந்து நா	... ...
மபநிபபமபமமரி	ஸரிபம மரி ரிஸஸநி
... ...	... ...
ஸா ; ; ; ;	
ஞும்	

உ

ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(134-ம் பக்கத் தொடர்ச்சி)

(54) சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேஇலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கட றீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே.

பதவுரை.

இலங்கா புரிக்கு போகைக்கு – இலங்கைமா நகரத்திற்குச் செல்வதற்கு, நீ வழிகாட்டு என்றுபோய் – நீ வழிகாட்டக் கடவாய் என்று சென்று, கடல் தீ கொளுந்த – கடலானது நெருப்பு பற்றச் செய்ய, வாகை சிலை வளைத்தோன் – வெற்றி பொருந்திய கோதண்டத்தை வளைத்தவராகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு, மருகா - திருமருகரே! மயில் வாகனனே - மயிலை வாகனமாக உடையவரே! சாகைக்கும் – இறப்பதற்கும், மீண்டு பிறக்கைக்கும் அன்றி - பின்னும் திரும்பத் திரும்ப பிறப்பதற்கும் அல்லாமல், தளர்ந்தவர்க்கு - வறுமைப் பிணியால் தளர்வுற்றவர்கட்கு, ஒன்று ஈகைக்கு – ஒரு பொருளைக் கொடுத்து உதவி செய்வதற்கு, என்னை விதித்தாய் இலையே – அடியேனை ஏற்படுத்தினையில்லையே? (இது என்ன நியாயம்?)

விரிவுரை.

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கும்:—

மனிதர் பிறந்து வளர்ந்து உண்டு உடுத்து உயிர்த்து உறங்கி தளர்ந்து ஒரு நற்கருமமும் புரியாமல் வறிதே இறந்து படுகின்றனர். மீண்டும் பிறந்து அவமே உழன்று அழிகின்றனர். ஆகவே பிறப்பதும் இறப்பதுமாகவே யாகிப் பயனற்றுப் போகின்றனர். காட்டிலே சில மரங்கள் தாமே தோன்றி வளர்ந்து ஒருவருக்கும் பயனின்றி

பட்டுப்போதல் போலென்றறிக. இதை நினைக்கின் அறிவுடைய ஒருவனுக்கு உள்ளங் கவலுமன்றோ? அந்தோ! காட்டிலே எரிந்த நிலவும், கடலிலே பொழிந்த மழையும், களரிலே விதைத்த விதையும், ஆற்றிலே கரைத்த புளியும், அறிவிலார்க் குரைத்த அறமும்போல் வறிதே யாகின்றனர். பெறுதற்கரிய இம் மானிடப் பிறவியைப் பெற்று ஒரு பயனுமின்றி சாவதினும் மடமை வேறுளதோ?

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. — திருமந்திரம்.

ஒரு சிறந்த நற்கருமத்தைச் செய்து இறந்தவர், இறந்தவரேனும் இறந்தவ ராகார்; இருந்தவரே. ஒரு பயனுமின்றி வாழும் மனிதர் இருந்தவரேனும் இருந்தவராகார்; இறந்தவரே. பல திருக்கோயில்களைப் புதுக்கிப் பொன்றாப் புகழ் பெற்ற கோச்செங்கட்சோழன், திருமலைநாய்க்கர், தருமகுணசீலர் பச்சையப்ப முதலியார், சீதக்காதி மரக்காயர் முதலியவர்கள் இன்றும் புகழுடம்பு தாங்கி இருக்கின்றா ரன்றோ?

உலகில் இறந்தவர் இறந்தவ ராகார்; ஒன்றைக் கொடு என்று பிறரிடம் போய் கையேந்திக் கேட்டல், இழி தொழில் செய்தல் முதலிய தீமைகளைச் செய்பவர் உயிரோடிருந்தும் இறந்தவரே; தனக்கு இருக்கட்டு மென்று எண்ணாது ஈதல் முதலிய நன்மைகளைச் செய்பவர் இறந்தவரேனும் இருப்பவராவர். இதனைக் கம்பர் கூறுமாறுகாண்க.

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே.

ஆதலால் ஒவ்வொருவரும் தமது பிறப்பு யாதொரு பயனு மின்றி வறிதே போகா வண்ணம் ஏதாவது ஒரு சிறந்த நலத்தைச் செய்ய வேண்டும். அந் நலங்களுள் தலை சிறந்தது யாதோ எனின் ஈதல் என்னும் அறமேயாம். ஆதலி

னூல்தான் "அறஞ்செய விரும்பு" என்று முதலாவதாகக் கூறிய தமிழ்க்கிழவி "அறனை மறவேல்" என்று மீண்டுங் கூறுகின்றனள்.

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. —திருவள்ளுவர்.

அறமே மறங்கள் முழுதழிக்கும் அறமே கடவு ளுலகேற்றும்
அறமே சிவனுக் கொருவடிவம் அறமே சிவனை வழிபடுவோர்க்
கறமே எல்லாப் பெரும்பயனும் அறமே யார்க்கும் எவ்விடத்தும்
அறமே யச்சந் தவிர்ப்பதென அறைந்தான் சாதா தபமுனிவன்.
—காஞ்சிபுராணம்.

தளர்ந்தவர்க்கொன்றுஈகைக்குஎன்று எனைவிதித்தாயிலையே:—

மேற் கூறிய ஈதலில் எது சிறந்தது எனின் கூறுதும். ஒருசிறிதும் ஆதரவற்ற பரம தரித்திரர்க்கு ஒன்று ஈவதே மிகச் சிறந்ததாம்.

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. — திருவள்ளுவர்.

அற்றார் என்ற சொல்லை அன்பர்கள் உற்றுப் பார்க்க. ஆதார மின்றி, வேறு போக்கிட மின்றி, போற்றுவா ரற்று நிர்க்கதியாக உடையவனை அழைத்து இலைநிரம்ப அன்னமும் கறிகளுமிட்டு வயிறார உண்பித்து ஆடையும் பொருளும் தந்தால் அவன் உள்ளம் குளிரும்; அதனால் உயிர் குளிரும்; உயிர்க்குயிரா யுள்ள சிவங் குளிரும். அவன் அளவற்ற மகிழ்ச்சி யுறுவன். அவன் மகிழ்வதைக் கண்டவுடனே கொடுக்கின்றவனுக்கும் மகிழ்ச்சி யுண்டாகும். செல்வத்தால் பெறுவது மகிழ்ச்சி. இதனை ஏன் செல்வமுடையார் உணரா திருக்கின்றனர்?

ஈத்துவக்கு மின்ப மறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர். —திருவள்ளுவர்.

இலங்கைக்கு .... சிலைவளைத்தோன்:—

இராவணன் எண்ணில்லாத சேனைகளையும், அளவற்ற

வரங்களையும், ஆற்றலையும் படைத்திருந்தனன்; எனினும் அற நெறிநின்றும் வழுவினன்.

> அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
> நின்றாரிற் பேதையா ரில்.

என்ற பொய்யா மொழிப்படி பிறன்மனை நயக்கும் பேதையனாயினன்.

> அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
> இழுக்கா வியன்ற தறம்.

என்பதனை உணராது கெட்டான். அதனால் அறநெறி யீதுவே என்று உலக முணர திருமால் ஸ்ரீராமராக மன்னு புகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்க்கத் திருவவதாரஞ் செய்து, ஏகபத்நீ விரதத்துடன் தூய ஒழுக்கமே உயிராகக் கொண்டு, பெற்றோர்ப் பேணல், உடன்பிறந்தாரை உவத்தல், அடைந்தார்க் கருளல், சொற்சோர்வு படாமை முதலிய நற்குணங்களைத் தம் வாழ்க்கையில் காட்டி யருளினர். பிறன்மனை நயந்த இராவணனை, அவன் வாழும் இலங்கை போய் "கரங்கு திரைக் கருங்கடலுங், காரவுணப் பெருங் கடலுங் கலங்கி எரிய" வெற்றி வில்லை வளைத்தனர்.

> "நீடிய அரக்கர்சேனை நீறுபட்டொழிய வாகை
> சூடிய சிலையிராமன்" — கம்பர்.

மயில்வாகனனே:--

அமரரைச் சிறையிட்டு ஆயிரத்தெட் டண்டங்களை யும் நூற்றெட்டு யுகங்களாக பல அலக்கண் விளைத்து அரசு புரிந்த சூரபன்மனுடைய தருக்கை யடக்கி மயிலாகச் செய்து அதன்மீது ஏறி யருளுகின்ற கருணைக் கடல் கந்தக்கடவுள். சூரபன்மனது பிறப்பையும் இறப்பையும் தவிர்த்து அழியாப் பதம் அருளினார். ஆதலினால் நமக்கும் அதனை யருளுவர். தளர்ந்த தேவர்க்கு உதவிய தயாபரன் நம்மையும் அவ்வாறு தளர்ந்தவர்க்கு ஒன்று தருமாறு செய்வன். அவன் செய்வித்தா லன்றி நம்மாற் செய்ய முடியா தல்லவா? அதனால் அவனிடமே வரமாகக் கேட்கின்றனர்.

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

"சீகரமூர்த்தி"

வடக்கே உச்சயினி என்று ஒரு நகரம் உண்டு; அது அவந்திதேசத்தின் தலைநகரம்; ஆங்கு மாகாளேசுரர் என்ற சிவமூர்த்தி எழுந்தருளி யுள்ளார். அது பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களுள் ஒன்று. உச்சயினி நகரத்தை சந்திரசேனன் என்ற மன்னர் பெருமான் மநுநெறி வழுவாது அரசுபுரிந்தனன். அவ் வேந்தன் மாகாளேசுரரை மெய்யன்புடன் வழிபாடு செய்துவருங்காலை, சிவகணத் தலைவருள் ஒருவரான மாணிபத்திரர் என்பவர் திருக்கைலை மலையினுள்ள சிந்தாமணியை சிவபெருமான் கட்டளைப்படி கொணர்ந்து கொடுத்து நீங்கினர். அதனை மன்னன் அணிந்துகொண்டனன். அம் மணியைத் தாமும் அணிந்துகொள்ள விரும்பி அழுக்காறு கொண்ட மற்றை யரசர்கள் அனைவரும் திரண்டு வந்து நகரத்தை வளைந்து அமராடத் தொடங்கினார்கள். சந்திரசேனன் அது கண்டும் சிறிதும் அஞ்சாமலும், வேறு காரியங்களைச் செய்தற்கு எண்ணாமலும் அன்று சனிப்பிரதோஷ மாதலால் சிவபூஜைக்கு வேண்டிய பொருள்களுடன் சிவாலயம் சென்று, புரமூன் றெரித்த புனிதரை மன மொழி மெய்களால் வழிபட்டு திரு ஐந்தெழுத்தோதி ஓவியம்போல் அசைவற் றிருந்தான்.

அதே சமயத்தில் ஆயர் குலத்தில் பிறந்த ஒரு மாது தன் மைந்தன் சீகரனுடன் கோயிலுக்கு வந்தாள். சீகரன்

கருத்துரை.

திருமால் மருகரே! மயில் வாகனரே! இறப்பு பிறப்பை யொழித்து அடியேனுக்கு தருமசிந்தையைத் தந்தருள்வீர்,

[stamp]

அரசன் சிவபூசை செய்வதை உற்றுப் பார்த்தான். அவன் உள்ளம் அதில் ஈடுபட்டுவிட்டது. வீடு சென்று மணலால் சிவலிங்கஞ் செய்து பச்சிலைகளை மற்றைய பூஜைக்குரிய பொருள்களாகப் பாவித்து கண்ணீர் பாய கசிந்துருகி பூசித்து தியானத்தில் அசைவற் றிருந்தான். அவன் தாய் வந்து "குழந்தாய்! உணவுசெய்ய வருவாய்" என்று அழைத்தாள். சீகரன் முப்பாழும் பாழாய் அப்பாலுக் கப்பாலாய் கருவி கரணங்கள் ஓய்ந்து அசைவற் றிருந்தா னாதலின் தாயழைப்பது அவன் செவியில் விழவில்லை. பலமுறை யழைத்தும் மகன் கேழ்க்காம லிருந்ததால் தாய் சினங் கொண்டு "என்ன விளையாடல் இது?" என்று சீறி அவனை மோதிப் புடைத்து சிவலிங்க முதலியவற்றைக் கலைத்துச் சென்றனள்.

சீகரன் சமாதி கலைந்து பார்த்து உள்ளம் வருந்தி "எம் பெருமானே! கருணைக் கடலே! என்செய்வேன்? அருட் பெருங் கொண்டலே" என்று கூவி யழுது உண்ணுமல் மூர்ச்சித்தனன். அவன் அன்புக்கு இரங்கி சிவபெருமான் ஆங்கு ஓர் திருக்கோயிலும் சிவலிங்கமும் அழகுற உண் டாக்கி யருளினார். மூர்ச்சை தெளிந்த சீகரன் அது கண்டு அற்புத முற்று ஆனந்தக் கண்ணீர் வடித்து உள்ளம் உருகி மீண்டும் வழிபடுவா னாயினான். அவன் தாய் தன் வீடு பொன் மயமாக விளங்குவது கண்டு வியப்புற்று, மக னுடைய மட்டற்ற பெருமையை உன்னி உவகை யுற்று சந்திரசேன மன்னரிடம் ஓடி நிகழ்ந்ததைத் தெரிவித்தனள். அரசன் அமைச்ச ராதியோர் சூழவந்து இவ் வற்புதத்தைக் கண்டு களித்து சிவபெருமானது கருணையையும் சீகரனது கனிந்த அன்பையும் எண்ணிப் போற்றினர். படை யெடுத்து வந்த அரசர்களும் இவ் வதிசயத்தைக் கண்டு அஞ்சி அமராடுவதை யொழித்து சனிப்பிரதோஷத்தில் வழிபட்டு அருள் பெற்ற சீகரனைப் பணிந்து நின்றனர்.

அப்போது அஞ்சனைப் புதல்வராகிய அநுமார் அங்கு வந்தார். அறிவின் சிகர மாகிய அவரை அனைவரும் வணங்கினர். ஆஞ்சனேயர் சீகரனை எடுத்து அணைத்து

உச்சி மோந்து உள்ளம் உவந்து "மைந்த! மாலயனாதி வானவரும் பெறுதற்கரிய பெரும்பேற்றைப் பெற்றனை. ஆயர் குலமணியே! நின் தவமே தவம். தரும வடிவாகிய பசுக்களைக் காத்துவந்த நின் குலஞ் செய்த மாதவத்தின் பயனெல்லாந் திரண்டு ஓருருவெடுத்தாய். சனிப்பிரதோஷத்தின் பெருமையை உலகமறியச் செய்தனை. நீ செய்த இப் பூசனையின் பலனால் திருமால் நின் எட்டாந் தலைமுறைப் பிள்ளையாகத் தோன்றுவர். நின் குலத்துத் தோன்றும் நந்தகோபன் என்பான் வளர்ப்பான். அதனால் நின் குலத்திற்கும் நின் பிதிர்களுக்கும் உலகத்திற்கும் நன்மைகள் விளையும்" என்று அருளினார்.

சீகரன் அநுமாரைத் தொழுது "என்னையனே! எனது எட்டாந் தலைமுறையில் விஷ்ணுமூர்த்தி கண்ணபிரானாக அவதரிப்பதும், வளர்வதும், அவர் ஆடலும், அற்புதமும் அடியனேன் இப்போதே கண்டு ஆனந்திக்க அவாவுகின்றேன். அருள்புரிவீர்" என்றான். அஞ்சனைபயந்த அண்ணல் "அன்பனே! அவை எம்மாற் செய்தலியலா; கானமயில் வீரராகிய ஞானபண்டிதரால் இயலும். வேண்டிய வரந் தரும் வேலாயுதக்கடவுளைக் குறித்து நற்றவம் புரிவையேல் நின் கருத்து நிறைவேறும்" என்று கூறியருளிச் சென்றனர். மற்றையோரும் மகிழ்ந்து சீகரனை வணங்கித் தத்தம் இருக்கை யேகினர்.

சீகரன் விந்தமலைக்கு மேற்புறத்தே சோலை சூழ்ந்த குமாரவனம் என்னுந் திருத்தலஞ் சென்று எந்தை கந்தவேளை எந்த வேளையுந் தியானித்து பற்பல ஆண்டு தவங் கிடந்தனன். அத் தவாக்கினியாலே பொன்னுலகில் வாழும் புத்தேளிரும் புழுங்கினர். சீகரனது மாதவத்திற் கிரங்கி, "மருவு மடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூரப் பெருமாள்" பச்சைமயில்மீது காட்சி தந்தருளினர். சீகரன் எம்பெருமானைக் கண்டு கரையிலா மகிழ்ச்சியுடன் தொழுதான்; அழுதான்; தனது விருப்பத்தையும் கூறி வேண்டினன்.

கண்ணனுற் பத்தியான காரண முதலா யன்னான்
எண்ணுதற் கரிய வாய வைகுண்ட மெய்துங்காறும்
நண்ணிய தினமோர் பத்தின் நாடகத் தியற்கையாகத்
தண்ணளி சிறப்ப ஆடிக் காட்டென வணங்கித் தாழ்ந்தான்.

வேண்டிய போகமது வேண்டிய போதடியர் வேண்ட வெருது தவும் வேலாயுதக்கடவுள், யாதவகுலக் கொழுந் தாகிய சீகரன் விருப்பப்படியே, மதுரைச் சிறைச்சாலை யில் கண்ணபிரான் திருவவதாரஞ் செய்ததும், ஆயர்பாடி யில் நந்தகோபனிடம் வளர்ந்ததும், பூதனை சகடாசுரன் அகன் பகன் சாணூரன் முட்டிகன் ஆகிய அசுரர்களை வதைத்ததும், கோபிகைகள் மனைதொறும் நவநீதங்களைக் களவு செய்ததும், உரலில் கட்டுண்டு மருதிடை தவழ்ந் ததும், இந்திரன் பொழிந்த மழையைத் தடுக்க கோவர்த் தன கிரியைக் குடையாகப் பிடித்ததும், காளிந்தியின்மீது நடித்ததும், வேய்ங்குழலிசைத்து ஆமேய்த்து அருள் புரிந் ததும், குசேலருடன் கல்வி பயின்றதும், குவலயாபீடத்தை யொழித்து கம்சனைக் கொன்றதும், உருக்குமிணி, சத்திய பாமை, மித்திரவிந்தை, காளி, நப்பின்னை, சத்தியை, பத் திரை, சாம்பவதி என்ற நன்மங்கையரை மணந்ததும், அவருள் சாம்பவதிக்கு மகப்பேறு இன்மையால் உபமன்யு முனிவரிடம் சிவதீக்கை பெற்று விபூதி உருத்திராக்க மணிந்து தவஞ் செய்து சிவபெருமான் கருணையால் சந்ததி பெற்றதும், துரியோதனனிடந் தூது சென்று விச்சுவ ரூபங் காட்டியதும், அருச்சுனனுக்குக் கீதோபதேசஞ் செய்ததும், பாரத யுத்தஞ் செய்வித்து பூபாரந் தீர்த்ததும், வைகுந்த மடைந்ததும், பிறவும் ஆகிய எல்லாவற்றையும் காட்டியருளினர். சீகரன் அப்போதே நடப்பதுபோல் கண்ணாரக் கண்டு கண்ணுங் கருத்துங் குளிர்ந்தனன். அறுமுகவள்ளல் அடிமலர்மேல் வீழ்ந்து "அருட்கடலே! அடியேன் பொருட்டு இனி நிகழ இருக்கும் கண்ணன் சரிதையைக் காட்டியருளினீர். என்பேர் உனக்கு விளங்க இத்தலத்துவிளங்கி யருள்புரிந்து எனக்கும் உமது திரு வடிப்பேறு அருளும்" என்று குறையிரந்து நின்றனன்.

முருகா

கற்பு.

சுந்தரேசனுக்கும் சுகுணவல்லிக்கும் நடந்த திருமணத்தின் சிறப்பைப்பற்றி அந்த ஊரிலும் சுற்றுப்பக்கங்களிலும் பலநாள்கள் வரைப் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த இருவரும் பிரம்ம சிருட்டியில் ஒரு தனிப் பிறவிகள். ஒற்றுமைக்கு உறைவிடமாக உறைந்தார்கள். சுந்தரேசன் தனக்கு சுகுணவல்லி மனைவியாகக் கிடைத்ததைக் குறித்து உள்ளம் பூரித்தான்; தன்னை மெத்த பாக்கியசாலியாகவும் நினைந்தான். அவ்வாறே சுகுணவல்லியும் தன் கணவன் சுந்தரேசனுடைய நற்குணங்களையும் அளவற்ற அன்பையும் எண்ணி, அவனைத் தனக்கு மணவாளனாகத் தந்த தன் இஷ்டதேவதையை வாழ்த்தினாள். அவர்கள் வாழ்க்கையாகிய கப்பல் இன்பமாகிய கடலில் வெகு சுகமாகத் தவழ்ந்து சென்றது.

சுந்தரேசனுக்கு உயிர்த்தோழன் ஒருவன் இருந்தான்; அவன் பெயர் நச்சினார்க்கினியன். பேருக்குத் தக்கவாறே தன் நண்பனுக்கு மிக்க இனியனாக விளங்கினான். சுந்தரேசனுடன் இணைபிரியாதிருப்பன்.

சுந்தரேசனுக்கு எல்லாப் பேறுகளும் பொருந்தி யிருந்தும் மகப்பேறு மட்டும் வாய்க்கப்பெறா திருந்தான். அதனால் அவன் மிகவும் உள்ளங் கவன்றான். பற்பல அறங்களைச் செய்தான். தன் அருமை மனைவியுடன் காசி முதல் கன்னியாகுமரி ஈறாக எல்லாத் திருத்தலங்களையுஞ் சேவித்தான். பற்பல புண்ணிய தீர்த்தங்

அங்ஙனமே ஆறுமுகப் பெருமான் அருளி, அத்தலத்தில் "சீகரமூர்த்தி" என்ற திருப்பெயருடன் எழுந்தருளினர். சீகரனும் செவ்வேட்பரமன் செம்மலர் நோன்றாட் கமலங்களிற் சேர்ந்து இன்புற்றனன்.

கோகுலத் தாயன் வேட்ட குறிப்பெலா நடித்துப் பின்ன
ரோகையிற் கண்ணனான உயர்திருக் கோலங் காட்டி
வாகுறு கண்ணன் சாயுச் சியத்தையும் வழங்கிச் செவ்வேள்
சீகரக் கடவுளென்றோர் திருப்பெயர் சூட்டிக் கொண்டான்.

களில் மூழ்கினான். பல ஏழைகளைப் பரிபாலனஞ் செய்தான். முருக வேளை வேண்டிப் பற்பல விரதங்களை யநுஷ்டித்தான். மகப்பேறு பெறுதற்குரிய காலம் எய்தப் பெறாமையால் அவனுடைய விருப்பம் நிறைவேறவில்லை.

அவனுடைய நண்பன் நச்சினார்க்கினியன் சுந்தரேசனை நோக்கி, “அன்ப! மகப்பேறு இன்மை குறித்து நீ மிகவும் வருந்துகின்றனை; எனக்கு ஒன்று தோன்றுகின்றது. அது உனக்கு விருப்பமாயின செய். வேறு ஒரு கன்னிகையை மணந்து கொண்டால் ஒருவேளை திருவருளால் சந்தானம் உண்டானாலும் உண்டாகலாம். இது ஒன்றைத் தவிர இனி வேறு செய்யத்தக்கதில்லை” என்றான். சுந்தரேசன், “நண்ப! என் உயிரினு மினிய சுகுணவல்லியை மனைவியாகக் கொண்ட நான் இனி வேறுஒரு பெண்ணுடன் வாழ உள்ளம் இடந் தராது. கற்பகத் தருவின்கீழ் வாழ்ந்த ஒருவன் கள்ளிச் செடியின்கீழ் வாழ இசைவானோ?” என்றான். நச்சினார்க்கினியன், “ஆர்வல! சுகுணவல்லியை விடுத்து உன்னைத் தனியாகவா வாழச் சொல்கின்றேன்? அப்படிக் கில்லை; அந்த உத்தமியை மறக்கவோ அல்லது துறக்கவோ சொல்லவில்லை. அவருடன் கலந்து அவர்கள் அநுமதி பெற்றே செய்” என்றான். சுந்தரேசன் “சுகுணவல்லி இசைந்தால் செய்வோம்” என்று ஒருவாறு இசைந்தான்.

ஒருநாள் சுந்தரேசன் தன் மனைவியுடன் மேல்மாடியில் இனிது இருந்தான். நல்ல மெல்லிய காற்று வீசிக்கொண் டிருந்தது. மாலை நேரம்; பறவைகள் தத்தம் பேட்டை நோக்கிக் கூட்டுக்குச் சென்றுகொண் டிருந்தன. கதிரவன் தன் கிரணங்களை யெல்லாம் சுருக்கிக் கொண்டு மேற்கடலில் முழுகிக்கொண் டிருந்தான். செம்மேனிப்பெம்மான்போல் மேலைவானம் சிவந்திருந்தது. சுந்தரேசன் தன் அன்புக் களஞ்சியத்தை நோக்கி “பெண்ணரசே! நமக்கு எல்லாம் பொருந்தி யிருந்தும் புதல்வர்ப்பேறு இல்லாதிருக்கின்றது. அதற்கு என்செய்வது என்று எனக்குத் தோன்றவில்லை. நீதான் ஏதாவது வழி சொல்லவேண்டும்” என்றான். சுகுணவல்லி “பிராணேச! வேறுஒரு நல்ல கன்னிகையை மணந்து கொள்ளும். அவளிடத்திலாவது ஒரு குழந்தை பிறந்து நமது வம்சத்தை வளர்க்கட்டும். அதனைவிடவேறுவழியிருப்பதாகஎனக்குத் தெரியவில்லை” என்றாள். சுந்தரேசன் தான் எதைநினைத்துக் கேட்டானோ அதையேஅவள் குறித்ததுகுறித்து வியப்புற்றான். “பெண்ணமுதே! நின்னை விரும்பிய உள்ளம் இன்னொரு பெண்ணை எப்படி விரும்பும்? தவிர மறுமணம் செய்துக்கொண்டால் உனக்கு வருத்தம் உண்டாகாதா?” என்றான். சுகுணவல்லி “நாதா! எனக்கு ஏன் வருத்தம் உண்டாகின்றது? அவளும் நானும் ஒற்

றுமையாக இருந்து தங்களுக்கு இனியவே செய்து தங்கள் உள்ளம் உவக்குமாறு நடப்பேன். சந்தேகமில்லை. மகப்பேறு வேண்டிதானே செய்துக்கொள்ளச் சொல்லுகின்றேன். தங்கட்கு சரி என்று தோன்றினால் செய்யும்" என்றாள். சுந்தரேசனும் அதுவே தக்கது என்று துணிந்தான்.

அழகிற் சிறந்த அங்கசுந்தரி என்பாளை சுந்தரேசன் இரண்டாவது மனைவியாக மணந்துகொண்டான். அங்கசுந்தரியை சுகுணவல்லி தன் மகளைப்போல் பரிந்து உபசரித்து வந்தனள். ஆயினும் அங்கசுந்தரி சுகுணவல்லியைத் தனது ஜன்ம விரோதியைப் போல் பார்த்தாள். அவள் கை தன்மேல் பட்டால் நெருப்பு படுவதுபோல் கொதிக்கும். அவள் இனியசொல் விஷம்போல் வெறுப்பாக இருக்கும். இப்படி மூன்று மாதங்கள் கழிந்தன. தென்றல் முற்றிப் பெருங்காற்றானதுபோல் அங்கசுந்தரி சுகுணவல்லியை நேர்முகமாகவே ஏசிப்பேச ஆரம்பித்தாள். சுகுணவல்லி சும்மா தற்செயலாகக் கனைத்தாலுங்கூட அங்கசுந்தரி "ஏண்டி உனக்கென்ன அத்தனை அகங்காரம்? ஏன் என்னைப் பார்த்து கனைக்கின்றாய்? என்னைத் தொலைத்துவிடுவேன் என்கின்றனையோ? ம் ...... என்னைத் தொலைக்க உன் அப்பனாலும் ஆகாது, பாட்டனாலும் ஆகாது; பேசாமல் விழுந்துகிட; வீணே கெட்டுப்போகாதே" என்று சரமாரியாகப் பேச ஆரம்பித்துவிடுவாள். சுகுணவல்லி பரமசாது; பாவம். இந்த வாயாடிவம்பியிடம் அகப்பட்டுக் கொண்டாள். "அம்மா! குழந்தாய்! ஏன் இப்படி என்னை ஏசுகின்றனை? கடவுளறிய நான் உன்னைக் கண்டு கனைக்கவில்லை. தொண்டைப் புகைச்சலினாலே கனைத்தேன். நீ தப்பாக நினைத்து ஏன் இப்படி பேசுகின்றனை? அக்கம்பக்கம் என்ன நினைக்கும்? கணவன் ஒரு பறவை. அவருக்கு நீ ஒரு இறகு; நான் ஒரு இறகு. இந்த இரு இறகினால்தான் அவர் பறந்து சுகமுற முடியும். உனது உள்ளத்தில் என்னை மாற்றவளாக நினையாதே. கணவனுக்கு நம்மால் கலக்கம் வரக்கூடாது. பொறுமையாக இரு" என்றாள். அங்கசுந்தரி "அடியே! நீ எனக்குப் புத்திசொல்ல வந்துவிட்டனையோ? போதும் போதும். உன் பொல்லாத வாயை மூடு. நான் ஆயிரம் பேருக்கு அறிவு சொல்வேன். குணங்கெட்ட கூர்ச்சமே!" என்று வசைமாரி பொழிந்தாள். இப்படி நாள்தோறும் சுகுணவல்லி தும்மினாலும், இருமினாலும் அங்கசுந்தரி தன் பாட்டை ஆரம்பித்துவிடுவாள். சுகுணவல்லி ஒவ்வொருநாளையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்தாள். இதனை சுந்தரேசன் கண்டு கலங்கினான்.

சுந்தரேசன், "சனியனை விலைகொடுத்து வாங்கினதுபோலாயிற்றே? என்வாழ்வு எவ்வளவு இன்பமயமாக இருந்தது? அத்

நிலையும் இப்போது நேர்மாறாகத் துன்ப மயமாக ஆய்விட்டதே! அந்தோ! என்செய்வேன்? எப்போது பார்த்தாலும் வீட்டில் வாக்குவாதம்; வசை மழை; எவ்வாறு இதை ஒழுங்குசெய் வேன்? நச்சினார்க்கினியன் வார்த்தையைக் கேட்டு நான் கெட் டேன். பிள்ளையில்லை யானாலும் பாதகமில்லை. இந்த சள்ளை யில்லாமலிருந்தால் சரி" என்று சிந்தனை செய்தான். நண்பனோடு முறையிட்டான். நச்சினார்க்கினியன் "நண்ப! இருவரையும் தனித் தனி வீட்டில் வைத்துவிடு. வழக்கில்லாமல் ஒரு வகையாய் அமைதி யேற்படும்" என்றான். சுந்தரேசனும் அது தக்கதென்று நினைந்து சுகுணவல்லியையும் அங்கசுந்தரியையும். தனித்தனி வீட்டில் இருத்தினான். சுகுணவல்லிக்கு சற்று ஆறுதலுண்டா யிற்று.

திருவருள் துணைசெய்தமையால் சுகுணவல்லி கருக்கொண் டாள். ஐந்துமாதம்; சுந்தரேசனுக்கு அளவுகடந்த ஆனந்தம். சுகுணவல்லியிடம் மிக்க பட்சமாகவும் அவள் விரும்பியதை யெல்லாந் தந்தும் இனியனாகவும் இருந்தான். அதனால் அங்கசுந்த ரிக்கு அங்கம் பதறியது. பொறாமைக்கனல் மூண்டு புகைந்தது. சுகுணவல்லியை அடியோடு அழிப்பதற்கு என்னவழி யென்று யோசித்தாள். அவளுடைய கெடுமதி ஒரு சூழ்ச்சியைச் செய்யத் துணிந்தது.

அங்கசுந்தரி வலிய சுகுணவல்லியின் வீட்டிற்குச் சென்றாள். சுகுணவல்லி அங்கசுந்தரியைக் கண்டு மிக்க மகிழ்ச்சியுடன் "அம்மா! வா. இப்படி இரு. சுகந்தானே? ஏனம்மா முகம் என் னமோபோல் வாடி இருக்கின்றதே" என்று தாயினும் சாலப் பரிந்து இன்னுரை கூறினாள். அங்கசுந்தரி ஆலகால விஷம்போல் சீறி, "அடியே மாயக்கள்ளி! என்ன நயப்பு. இந்த பசப்பு வார்த் தையினால்தானே அவரை மயக்கி விடுகின்றனை. இந்த நயவஞ்ச னைப் பேச்சு எனக்குப் பேச தெரியவில்லை. நான் ஒரு வெள்ளைச் சோளம். அக்ரமப் பிண்டமே! நீ கருவடைந்த சங்கதி எனக்குத் தெரியாதா? பிள்ளையைப் பெறப்போகின்றோமென்ற ஆங்காரத் தால் தலைவிரித்து ஆடுகின்றாய். உன்னுடைய கெட்டநடை எனக் குத் தெரியும். அந்த கேனராயர் உன்னை உத்தமியென்று நம்பி யிருக்கின்றார். இந்த வீடு விபசார விடுதியாகி விட்டது. இரு இரு. எல்லாம் வெளியாகப் போகின்றது" என்று ஒரு பெரிய இடியை இடித்தாள். சுகுணவல்லியின் உள்ளமும் உயிரும் உடலும் நடு நடுங்கின; "சிவசிவா" என்று செவியைப் பொத்திக் கொண் டாள். "கடவுளே! இது என்ன விபரீத வார்த்தை?" என்று அலறி னாள். அங்கசுந்தரி இப்படி ஒரு பெரிய சொற்போர் விளைத்து வம்புரை கூறி தன் வீடுவந்தாள். சுகுணவல்லி அங்கசுந்தரியால்

யாது விளையுமோ? என்னபழி சுமத்துவாளோ? என்று மனங் கலங்கினாள்:

அங்கசுந்தரி நச்சினார்க்கினியன் வீட்டில் வேலைபார்க்கும் கிழவனை மெல்ல அழைத்து அவனுக்கு நல்ல மதுரமான தின்பண்டமும் காசும் தூசும் (ஆடை) தந்து அவனை வசப்படுத்தினாள். அந்தக் கிழவன் ஒரு பெரிய அசடன். 2 3 நாளில் அவனை தன் வசப்படுத்திய அங்கசுந்தரி, "பெரியவரே! நச்சினார்க்கினியனுடைய பாதரட்சையை ஒருவருக்கும் தெரியாமல் கொண்டுவந்து எனக்குத் தரவேண்டும்" என்றாள். அக்கிழவன் அங்ஙனமே கொணர்ந்தளித்தான். "ஓய்! இதைக் கொண்டுபோய் என் சக்களத்தி சுகுணவல்லிக்குத் தெரியாமல் அவள் கட்டிலின் கீழ் வைத்துவிடு: உனக்கு 25 ரூபாய் தருகிறேன்" என்றாள். அக்கிழவருமை அங்ஙனமே அப் பாதரட்சையை சுகுணவல்லியின் கட்டிலின் கீழ் வைத்துவிட்டான். அவளுக்கு அது தெரியாது.

அங்கசுந்தரி தான் நினைத்த நினைவு முற்றுப் பெற்றதாக மகிழ்ந்தாள். சுந்தரேசன் அங்கசுந்தரியிடம் வந்தான். அங்கசுந்தரி அவனைக் கண்டு மிக்க உபசாரஞ் செய்து, "என் அன்புக் கடலே! தாங்கள் தருமராஜாவைப்போல் இருக்கின்றீர். உங்களுக்கு வெளுத்ததெல்லாம் பால். கபடற்ற ஆத்மா. நான் என்னென்று சொல்வேன். சொல்லவும் நாவெழவில்லை. சொல்லாதிருக்கவும் முடியவில்லை. பொல்லாத உலகம். யாரைத்தான் நம்புவது? உயிர்த்தோழன் என்று நம்பியிருக்கின்றீர். அவளையும் பரம உத்தமி யென்று நம்புகின்றீர். நம்பகத் துரோகம்; மித்திரத் துரோகம். பெண்களை ஒருபோதும் நம்பக்கூடாது" என்று மிகவும் சாமர்த்தியமாகக் கூறினாள்.

சுந்தரேசன் "அங்கசுந்தரி! நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே. என்ன விஷயம்?" என்று கேட்டான். அங்கசுந்தரி "நாதா! நச்சினார்க்கினியன் சுகுணவல்லியிடம் வந்துபோவதாகக் கேள்வி. ஊரில் பெரிய வசை; தாங்கள் அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிட வேண்டாம். ஆராய்ந்து செய்யுங்கள்" என்றாள். சுந்தரேசன் "பெண்ணே! சீ சீ வாயழுகிப்போகும். நச்சினார்க்கினியன் பரம யோக்கியன்; சுகுணவல்லி சிறந்த கற்பொழுக்கமுடையவள். யாரோ பொறாமைக்காரன் கட்டிவிட்டிருப்பான். எனக்கு நம்பிக்கையில்லை" என்றான். அங்கசுந்தரி, 'நாதா! தாங்கள் இப்படித்தான் எல்லோரையும் நம்புகின்றீர். 'அள்ளாது குறையாது இல்லாது பிறக்காது' தாங்கள் ஆராய்ந்து பாருங்கள்" என்றாள். சுந்தரேசன் அன்று இரவு சுகுணவல்லியின் வீட்டிற்குச் சென்றான். சுகுணவல்லி கணவனை வரவேற்று உப

சரிந்தாள். படுக்கையறையிற் போய் சுந்தரேசன் கட்டிலில் அமர்ந்தான். கட்டிலின்கீழ் இருந்த பாதரக்ஷையைக் கண்டு திகைத்தான். அது நச்சினார்க்கினியனுடைய தென்பதையும் உணர்ந்தான். உடனே அங்கசுந்தரி அவன் மனதில் விதைத்த விதை முளைத்தது. ஒன்றுந் தோன்றாது அசைவற்றிருந்தான். உலகமே அவனுக்கு சுழல்வதுபோல் தோன்றியது. "ஆஹா! என்ன உலகம்? அங்கசுந்தரி சொல்லியது உண்மை. அவன் பாதரட்சை இங்குவர வேண்டிய காரணம் யாது? இனி உலகில் யாரைத்தான் நம்புவது? கடவுளே! என்ன மதிமோசம்" என்று பற்பல எண்ணினான். சுகுணவல்லி அங்குவந்து கணவனுடைய திகைப்பைக் கண்டு "என் ஆருயிர்த் தலைவரே! ஏன் இப்படி இருக்கின்றீர்? என்ன ஆலோசனை? முகம் மாறுதலையடைந்துளதே. காரணம் யாது?" என்று அன்புடன் கேட்டாள். சுந்தரேசன் "இந்த செருப்பு இங்கு எப்படி வந்தது!" என்று சற்று அதட்டிக் கேட்டான். சுகுணவல்லி அப்போதுதான் அதனைப் பார்த்து 'பிராணேசா! இது யாருடையதோ? எப்படி வந்ததோ? நான் ஒன்றுமறியேன்" என்று கலங்கிக் கூறினாள். சுந்தரேசன் ஒன்றுங் கூறாமல் எழுந்து நேரே அங்கசுந்தரியின் வீட்டிற்கு வந்தான். "பெண்ணே! நீ சொன்னது உண்மை: நச்சினார்க்கினியன் பாதரட்சை அவள் கட்டிலின் கீழிருக்கக் கண்டேன். அவன் வரப்போக இருக்கின்றான் போலும்" என்றான். அங்கசுந்தரி தனது எண்ணம் பலித்ததற்கு மகிழ்ந்து "காதலரே! எனக்கு இது வெகுநாளாகத் தெரியும் அவளும் ஒரு பெண். நானும் ஒரு பெண். நாம் சொல்லக்கூடாதென்றிருந்தேன் ஊரில் எங்கும் பழிச்சொல் அதிகரித்தபடியால் கூறினேன். அவள் இங்கு சண்டைபிடித்ததற்குக் காரணமும் இதுதான். தனியாகப் போய்விட்டால் இஷ்டம்போல் இருக்கலாம் என்பதுதான்" என்று தான் விதைத்த செடிக்குத் தண்ணீர் விட்டாள்.

சுந்தரேசன் தனித்திருந்து சிந்திப்பானாயினான். "முதலில் நம்மை மறுமணம் செய்துக்கொள்ள நச்சினார்க்கினியன் கூறினான். அவ்வண்ணமே சுகுணவல்லியும் கூறினாள். இரண்டாவது, சுகுணவல்லியைத் தனிவீட்டில் வைக்குமாறு கூறினான். சுகுணவல்லி அங்கசுந்தரியுடன் சண்டையிட்டு தனியே போக முயன்றாள். இவற்றை யெல்லாம் ஒன்றுசேர்த்து பார்க்கும்போது பெரிய மோசமாக இருக்கின்றது. நச்சினார்க்கினியனை நல்லவன் என்று எண்ணினேன். சுகுணவல்லி நம்மிடம் மிக்க அன்புடையவள் போல் நடந்தது அத்தனையும் வெறும் நடிப்பு. தான் செய்யும் அட்டூழியத்தை மறைக்கும் பொருட்டே அப்படி நடித்தாள். ஆ!

என்ன இந்திரஜாலம்!" இவ்வாறு சிந்தித்து இரவு முழுதும் அந்தக் கண்மூடி கண்மூடா திருந்தான்.

மறுநாள் அங்கசுந்தரி நச்சினார்க்கினியனுடைய வீட்டு வேலைக்காரனை யழைத்து "ஓய்! உனது முதலாளியினுடைய போடோக்களில் ஏதாவது சிறியதாக இருந்தால் யாருக்குந் தெரியாமல் கொணர்ந்து கொடு; ரூபாய் 25 தருகிறேன்" என்றாள். அவனும் அப்படியே கொணர்ந்தளித்தான். அதை அவனையே சுகுணவல்லியின் படுக்கையறையில் கட்டிலுக்கு அடியில் வைக்குமாறு சொன்னாள். அவனும் அப்படியே என்று சென்றான்.

இரவு மணி 8. சுந்தரேசன் சுகுணவல்லியின் வீட்டிற்கு சென்று அவள் படுக்கை யறையிலுள்ள பாதரட்சையை எடுத்து விசாரிக்கலா மென்று போனான். படுக்கை யறைக்குள் சென்று அதை யெடுக்கும்போது அந்தப் போடோவும் கண்ணிற்பட்டது. அவனுடைய சந்தேகமரம் வானளாவ வளர்ந்துவிட்டது. உடனே சுகுணவல்லியை நையப் புடைத்து "மாயக்கள்ளி! உன் வஞ்சனைப் பேச்சால் மயங்கிவிட்டேன். இந்தப் போடோ உன் படுக்கைக்கு எப்படி வந்தது? சீ தூர்த்தை! விபசாரி!" என்று வைதான். சுகுண வல்லி, கணவன் கால்மேல் வீழ்ந்து "நான் ஒரு பாவமும் அறியேன். முருகப்பெருமான் திருவுள்ள மறியக் கூறுகின்றேன். அவரே உண்மையை விளக்குவார்" என்று அழுதாள்.

சுந்தரேசன் அவளை உதைத்துத் தள்ளிவிட்டு நேரே அங்கசுந்தரியின் வீடு வந்தான். அப்போது மணி 9. நல்ல இருட்டு. அங்கசுந்தரி தன் கணவன் சுகுணவல்லி வீட்டிற்குப் போயிருப்பதை யறிந்து அவளுக்கு நல்ல உதை கிடைக்கும் என்று மகிழ்ந்திருந்தாள். அந்தக் கிழவன் வந்தான். அங்கசுந்தரி அவனை அன்புடன் அழைத்துப் பேசுவாளாயினள். சுந்தரேசன் அங்கசுந்தரி கிழவனுடன் பேசுவதை ஜன்னலில் கண்டு, ஒளிந்திருந்து கேட்பானாயினன்.

அங்கசுந்தரி:— பெரியவரே! நச்சினார்க்கினியன் போடோவை சுகுணவல்லியின் படுக்கையில் வைத்துவிட்டனையா?

கிழவன்:— ஆமாங்க அம்மா!

அங்க:— சரி. பாதரட்சையை வைத்தனையே அதேஇடத்தில்தான் வைத்தனையோ?

கிழவன்:— இல்லிங்க. போடோவை படுக்கைமேல் வைக்கச் சொன்னீங்களே? அப்படியே வைச்சுட்டனிங்க.

அங்க:— நல்ல வேலை செய்தாய். இனி அவள் வாழ்வு தொலைந்தது. இந்தா ரூபாய் 25.

கிழவன்:— சந்தோஷம். அம்மா! இன்னும் ஏதாவது எடுத்துவிட்டு வைக்கச் சொன்னாலும் வைச்சுடரேனுங்க. ஏனம்மா! அந்த செருப்பையும் போட்டோவையும் அந்த அம்மா கட்டிலின் கீழே வைக்கச் சொன்னீங்க?

அங்க:— அட அசடு. உனக்கு என்ன அதைப்பற்றி. பணம் வாங்கிக் கொண்டனையோ யில்லையோ போய்வா.

கிழவன்:— சந்தோஷம். வரனுங்க.

இவற்றை யெல்லாங் கேட்ட சுந்தரேசன், "ஆகா! இது என்ன பெருமோசம். இவளால் வந்த வினை" என்று சந்தேகந் தெளிந்து உள் நுழைந்து அந்தக் கிழவனைத் தூணில் கட்டி ஒரு அறை கொடுத்தான். அவன் யாவும் விளக்கமாகக் கூறினான். சுந்தரேசன் அங்கசுந்தரியைப் பார்த்து" அடி பாவி! உனக்கென்ன கேடுகாலம். சீ உன் முகத்தில் விழித்தாலும் பாவம் வரும் இனி உன்னைக் கண்ணாலும் பாரேன்." என்று வெறுத்து, தன் அருமையுடைய சுகுணவல்லியின் தூய்மையை எண்ணி மகிழ்ந்து, சுகுணவல்லியின் வீட்டிற்கு வந்து அவளைத் தழுவி நிகழ்ந்தவை யாவுங் கூறி ஆறுதல் செய்து அவளுடன் பண்டையினும் ஆயிர மடங்கு அன்புடன் வாழ்ந்தான். அங்கசுந்தரியின் பொறாமை அவள் வாழ்வை யடியோடு அழித்துவிட்டது. சுந்தரேசன் அவளை அறவே வெறுத்து விட்டான். அவளைக் கண்ணாலும் பாராது, தன் காதற் களஞ்சியத்துடன் கருத்தொருமித்து வாழ்ந்தான். நச்சினார்க்கினியன் நட்பும் வளர்ந்தது. சுகுணவல்லியின் வயிற்றில் ஓர் ஆண்மகவு பிறந்தது. அக் குழந்தையுடன் கொஞ்சிக் குலாவி இன்புற்று வாழ்ந்தனர்.

அதிசாரக் கழிச்சலுக்கு.

வெண்பா

காட்டாத்திப் பூவுங் கருங்காலி வேர்தோலும்
கோட்டானைத் திப்பிலியும் கூவிளமும் - கூட்டியே
காய்ச்சித்தேன் விட்டருந்த காணுஞ் சிறுவோர்க்கு
போச்சென் றதிசாரம் போம்.

காட்டாத்திப்பூ, கருங்காலி வேர்ப்பட்டை, யானைத் திப்பிலி, வில்வஇலை எல்லாம் சமஎடை கூட்டி [illegible]க்கு சமஎடை தேன் கூட்டி சற்றுநேரம் பா[illegible]மாவது போலக் கொதிவரக் காய்ச்சிக் கொடுக்க அதிசாரம் நீங்கும். ஒரு தடவைக்கு 2 பைசா அளவு.

உ

ஜில்லாக்களும் முருகர் தலங்களும்.

சிந்தைகவர் சித்தூர் ஜில்லாவிலே நீலமலர்
சேர்த் தணிகை மாமலையுடன்
தேவிவரு வள்ளிமலை யுங்கொண்டு,
தெற்கு செங்கற்பட்டு ஜில்லாவிலே
திருவளரு காஞ்சியுறு குமரகோட்டம் † கோடை
சீர் திருப்போரூருடன்
தெய்வ ஆண் டார்குப்ப முங்கொண்டு,
சென்னையிற் செல்வநிறை கந்தகோட்டம்

அந்தநிறை தெய்வமுகக் கோட்டமும் ஈட்டுபுக
ழாரு செவ்வேட் கோட்டமும்
அழகுநிறை குமரகோட்டம், பின்னர்
அன்பர்நிறை ஆர்க்காடு ஜில்லாவிலே
அடியாருள் ளத்திலே மாலேறு மயிலமும்,
அணிபெருகு தஞ்சை தன்னில்
அன்பர்பணி சாமிமலை சிக்கல்எட் டிக்குடியொ
டாவடயுள் ளிருக்கு வேளூர்

சிந்தையி னிடக்கொழி இடைக்கழியு மெண்கணும்,
சிராப்பளிச் சில்லாவிலே
திருப்புகழ் அளித்த வயலூருடன் விராலிமலை,
சீரோங்கு மதுரை தன்னில்
திருப்பரங் குன்றுடன் சோலைமலை பழநிமலை,
செல்வநிறை ராமநாத
சில்லாவில் மாயூர கிரியுடன், நெல்வேலி
சில்லாவில் செந்தூர் நறுங்

கந்தமுறு சோலைநிறை இலஞ்சிப் பதியுடன்,
கவினுரு சேலத்திலே
கண்கள் நாலாயிரம் வேண்டுசெங் கோடுடன்,
காலங்கோவை பகுதி தன்னில்
கருதுமலை மருதமலை பேர்பெற்ற சென்னிமலை,
கன்னடச் சுப்ரமண்யம்,
காணு மீழத்திலிற் கதிர்காம முங்கொண்ட
கந்தரருள் பெற்று வாழ்வாம்.

ராவ்பஹதூர். வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.

---

† கோடை - வல்லக்கோட்டை.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக்காரண்டி

அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்

உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

வ. ரு. புருஷோத்தம செட்டியார்

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்

(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)

நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

வெகு சரசம்! உத்திரவாதம்!!

எங்கள் சொந்த தரியில் தயார் செய்யும்

பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை.

பட்டு-சேலை தினுசுகள்

சாயத்திற்கும் ஜரிகைக்கும்

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.

வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,

எஸ். எஸ். சப்பந்தமூர்த்தி முதலியார்.

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.



ஏகஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர்தெரு மதராஸ்.

தந்தி விலாசம் "சேமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

"செமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜோலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.

1-க்கு 1—0—0. 1-க்கு 0—14—0.

கிடைக்குமிடம்:---

மோதிரங்கய்ய செட்டியார் சன்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi. N. A.